உ

கடவுள் துணை.

தென்னிந்தியா றெயில்வே என்னும்
கர்னாடகப் புகைவண்டியின் சிந்து.

சென்னை-சூளை.

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1923.

உ

கடவுள் துணை.

தென்னிந்தியா றெயில்வே என்னும் கர்னாடகப் புகைவண்டியின் சிந்து.

தென்னிந்தியா றெயில்பாரடி-பெண்ணேயிது
தெற்கேபோகுக்நேரடி

மன்னர்கள்தான் துதிக்கும் மதிரூஸ்கருகாக
உன்னிதமாகவே யுகமையாயேர்ப்பட்ட (தெ)

மண்டலத்தோர்புகழும் மதிரூஸ்எழும்பூரினில்
கண்டவர்வியப்படைக் கருதியமித்த (தெ)

சட்டமுடன்ஸ்டேஷன் பட்டணத்தோற்போற்ற
திட்டமதாகவே கட்டியிருக்கிற (தெ)

கண்ணாடிகதவுகள் கனத்தஆபீசுகள்
விண்ணோருப்மெச்ச விதமாகயேற்பட்ட (தெ)

கைகாட்டிமரங்களும் கனத்தஆளுகளும்
பைகான்சிநேகர்முதல் பலருமிருக்கிற (தெ)

இஞ்சின்வண்டிமுதல் இணையில்லாவண்டிகள்
அஞ்சுதலில்லாமல் தங்கியிருக்கிற (தெ)

டிக்கட்டுகள்வாங்கி இக்கட்டில்லாமலே
பக்குவமாகவே தக்கபடிபோவோம் (தெ)

சைதாப்பேட்டைஸ்டேஷன் சார்ந்தபரங்கிமலை
பயிலாகிறெயில்வண்டி பார்மீதிலேபோகும் (தெ)

பல்லாவரம்பாரு பக்கத்தில்வண்டலூரு
எல்லார்தங்குங்கூடு வாஞ்சேரியிதுபாரு (தெ)

அங்கமதயிடேற ஆண்டவனைப்போற்றும்
சிங்கபெருமாள்கோயில் ஸ்டேஷனிதுபாரு (தெ)

தங்கயிளப்பாரி தாகவிடாய்தீர
செங்கற்பட்டுஸ்டேஷன் சிறப்பதாய்நாம்வந்தோம் ()

கோர்ட்டுமுதலான தூக்குமரங்களும்
மேட்டிமையாய்ச்செயில் தாட்டியாய்த்தோற்றுது ()

பொன்விளைந்தகளத்தூரு புகலரியமதுராந்தம்
தன்மையுள்ளதாசில்தார் நடத்துங்கச்சேரி (தெ)

அச்சரபாக்கமிது அடர்ந்துவரும்றெயில்வண்டி
இச்சையுடமன்மாற்றும் இணையில்லாஸ்டேஷனிது ()

ஒலக்கூறு தாண்டி நாம் ஒபிலான திண்டிவனம்
கலக்கமிலாத்தாலுக்கா கட்டழகிவந்தோம்பார் (தெ)

புதுமையுள்ள சத்திரத்தில் போஜனம்நாம்செய்து
இதமுடன்றெயிலேறி இக்ஷணம்போகலாம் (தெ)

மானிலந்தான்புகழும் மயிலமெனுந்தலத்தில்
கானமயில்மீதேறும் கர்த்தனிருக்கிறூர் (தெ)

கண்டுபணிந்தால் கர்மவினைகள்போகும்
வண்டுவிகர்விழியாலே மாங்குயில்மொழியாலே (தெ)

விக்கிரவாண்டி விழுப்புரந்தாண்டி
பக்கத்திலேபண்ருெட்டி பண்புள்ளஸ்டேஷனிது ()

நெல்லிக்குப்பமெனும் நேரானவூரிது
அல்லலகற்றுந்திருப்பா திருப்புலியூரிது (தெ)

பேடைமயிற்கண்ணுளே பிரியாதேசெந்தேனே
கூடலூர்ஸ்டேஷனைக் குறிப்பாகப்பாரு (தெ)

ஆலப்பாக்கமிது அடுத்தபரங்கிபேட்டை
கோலமுள்ளகாயலார் குடிகளிருக்கிறூர் (தெ)

பார்தனிலுள்ளோர்கள் பத்தியாய்தான்துதிக்கும்
சிறுள்ளசிதம்பரத் தெரிசனஞ்செய்யடி (தெ)

நடராஜர்வீற்றிருக்கும் நலமானசிற்சபையை
மடய்யிலேநீயும் மனதினிற்போற்றடி (தெ)

தொல்லைவினைகளைத் துரத்திகருவருக்கும்
தில்லைமாகாளியின் தெரிசனஞ்செய்படி (தென்)

கனிவர்க்கங்களுண்டு காசாலட்டுமுண்டு
இனிமைப்பிரசாதங்க ளிருக்குமிடமுமுண்டு (தெ)

வல்வினையைத்தீர்க்கும் வயித்தீஸ்வரன்கோயில்
எல்லைவிட்டுமகா வேகமாய்த்தான்போகும் (தெ)

மாயவரங்குத்தாலம் வயங்குநரசிங்கபேட்டை
தூயஸ்டேஷன்கள் தாண்டிதுரிதமாகப்போகும் ()

திருவிடைமருதூர் தேன்பொழியுங்கும்பகோணம்
பருவுஞ்செந்தலைப்பேரு வந்தோமிப்போதடி (தெ)

பாவவிநாசனம் பகரும்ஐயம்பேட்டை
சோபமவைநீக்குஞ் சொகுசுள்ளதஞ்சாவூர் (தெ)

முப்பத்திரண்டும் முதன்மையாய்ச்செய்வித்த
தப்பில்லாபோஜராஜன் தங்கிபதஞ்சாவூர் (தெ)

சாலியமங்கலம் சார்ந்தஅம்மாம்பேட்டை
நீடாமங்கலமிது சேர்ந்தகொரடாச்சேரி (தெ)

குளிக்கரைஸ்டேஷனிது குணமுள்ள திருவாலூர்
களிக்கவேதியாகரைக் கண்டுதெரிசிப்போம் (தெ)

இத்தலந்தன்னிலே யிணையில்லாதேருகள்
மெத்தவுசித்தமாக மேன்மையாய்த்தோற்றுது (தெ)

அப்புரமிருக்கும் அடைவானஸ்டேஷன்களை
தப்பிதமில்லாமல் தன்மையுடன்சொல்வேன் (தெ)

கீவளூர்தானிது கிளர்ச்சிக்கில்தானிது
மேவிநாகப்பட்டணம் மேன்மையுடன்வந்தோ (தெ)

திடமுள்ள திருச்சிறாப் பள்ளிஸ்டேஷனிது
வடமேற்குறெயில்மாதை வந்துகலக்கும்பாரு (தெ)

பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிப்பட்ட
திட்டமுள்ளசொக்கநாதர் திருமதுரைதலமிது (தெ)

அங்கயற்கண்மீனாட்சி யம்மனிருக்கிற
சங்கைகளில்லாத சன்னிதியிற்கோரு (தெ)

திருப்பரங்குன்றம் திருமாநகரம்
விருப்பமுள்ளகள்ளுகுடி விருதுபட்டிஸ்டேஷன் (தெ)

துலுக்கபட்டிசாத்தூர் கோவில்பட்டிகுமாரபுரம்
துடர்ந்துவரும்ஸ்டேஷன் துருசாய்போகும்இஞ்சின்

கண்டவர்வியப்படையுங் சடப்பூருஸ்டேஷனிது
அண்டையிலிருக்குமணி யாச்சிசத்திரமிது (தெ)

செங்கைதகுண்டாதாண்டி சிறப்பானறெயில்வண்டி
விங்கைமிகுந்திருநெல் வேலியிதோவந்தோம் (தெ)

எத்தும்திட்டப்பாறை நேத்தியாய்நாம்வந்து
தூத்துக்குடி தலை தூரமேநாம்வந்தோம் (தெ)

தேசமெங்கும்புகழ் திருவண்ணாமலையில்வாழ்
பாசமுடன்வீர பத்திரனியம்பிய (தெ)

தென்னிந்தியா றெயில்வே சிந்து.

முற்றிற்று.

கடவுள் துணை.

ஆதிமூலேசர்பேரில்

தாய்மகளேசல்.

வினா-விடை.

தாய் வினா.

சிக்கறச்சீவிச் செருகுமைக்குழல் சேர்ந்தவிழ்ந்த
தென்னமகளே மனம்தேறுதலைசொல்லி யாறுமுக
புரியேறுடை யாதிமூலேசருனை யணைந்தாரோ. ௧

மகள் விடை.

மைக்கண்மடமாதருடன் மிக்கவிசைபாடிக்கொண்
டே யிருந்தேனப்போதவ்வண்டளகந்தனைக் கிண்டிநு
ழைந்துதேனுண்டபொழுதென்றன் கொண்டைவிழு
ந்ததுதாயே. ௨

தாய் வினா.

வாலைப்பிறைநுதலிலிட்ட நீலயபொட்டுகலைந்ததெ
ன்னமகளே கயிலைவாசர்திசைநேச ருனைபுரிசாரதிமூ
லேசருனை கண்டாரோ. ௩

மகள் விடை.

ஜலத்னமல்லவுச்சி காலத்திலென் பாங்கியருடனே
இருதோள்தட்டிக்கொண்டா னடித்திட்டகிறுலவேர்
பட்டுச்சிலைநுதற்பட்டுக் சலைந்ததென்தாயே. ௪

தாய் வினா.

பெண்கள்குருவேயுன்னிருகண்கள்சிவந்திருப்பதெ
ன்னமகளே தவஞ்செய்பெரியோர்மனதிற் புரியாவரு
ணைபுரிபாதிமூலர் பரிகாசம்போல்பேசினாரோ. ௫

(மகள் விடை.) தண்கமலவாவிதனிற்சகலகிரீடை பெ
ண்களுடன்செய்தேனப்போது தக்கவேதனின்மொக்
குமென்றே கயல்மொய்க்கவேஎன்னிரு கண்கள்சிவந்
ததுதாயே. ௬
(தாய்வினு.) சிஞ்சுகவாயிதழ்தனில் மஞ்சியபற்குறிபே
துமகளே மிருசங்கீதநடனபொற் பாதரொருகுழகை
ராதிமூலநாதருனை யணைந்தாரோ. ௭
(மகள் விடை) சஞ்சமலர்க்கரத்தெடுத்துக் கொஞ்சு
கிளிதனக்கு முத்தங்கொடுத்தேன் அந்தக்காவிற்கிளி
யதுகோ வைக்கனியெனபாவித்திகழ்தனைத் தாவிக்க
டித்ததுதாயே. ௮
(தாய் வினு.) செப்பிளநீர்முலைமுகட்டி லிப்படியேன
க்குறிகண்மகளே அந்தச்சேதியொளியாதென் காதி
னுரைநமதாதிமூலேசுரர் பாதியிரவில்வந்தாரோ. ௯
(மகள் விடை.) கைப்பலங்கொண்டெலுமிச்சங் கனிப
றித்தெய்தும் விசையினில்மெய்யிற்கிழித்ததற் கையப்
படவேண்டாந்தாயே. ௰
(தாய் வினு.) மார்பிலணியார்வடங்கோவை மணிநெ
றிந்ததென்னமகளே இந்தவார்த்தையை யென்முகம்
பார்த்துரை செய்யதுதோற்றியாதிமூல மூர்த்தியுனைக்
கண்டாரோ. ௰௧
(மகள் விடை.) பாரமுள்ளமாதருடன் பந்தெறிந்துவி
ளையாடும்போது அந்தப்பந்துவிசையுடன்வந்து வி
தொளிர்ந்தாள் நெரிந்ததுபொய்யன்றுதாயே. ௰௨

(தாய் வினா.) தனித்திருந்துமார் துகிலைத்தள்ளிதள்ளி
மூடிவெட்கப்பட்டால்கைகைதந் தாதிமூலேசர்வந்தே
கலந்தாரென் தன்தாமரையின்னேசந்தேகந்தோன்றி
ற்றுசொல்லால். ௰௩

(மகள் விடை.) பனிமுகந்துபொழிந்துடன் படபடப்
பாய் குளிர்க்காற்றுவரலால் அதைபார்த்துப்புடவை
யைப் போர்த்துக்கொண்டாலது தோற்றுமல்வீணிலே
தூற்றுதேபோடியென் தாயே. ௰௪

(தாய் வினா.) பளபளத்தமார்நரம்பு பச்சைகொண்டி
லச்சை யென்றமகளே அடிநீ பாதகியின்னமுஞ்சூது
சொன்னுன்னை மோதுவேன்பாலாதி மூலருனைகண்
டாரோ. ௰௫

(மகள் விடை.) சளசளப்பாபிரைச்சலிட்டுச் சட்டையி
ல்லாதேண்டிசண்டை போட்டாய்பச்சிலைச்சாற்றின்பி
ணாக்கெண்ணெய்சேர்த்து குழப்பியேபார்த்துநலங்கி
ட்டுத் தேய்த்துக்குளித்தனன் தாயே. ௰௬

(தாய் வினா) மேல்விரற்காந்தட்கரத்தின் வேல்வளைய
ல்தெரிந்த தன்னமகளே இந்தவிந்தையாலிப்போது
சந்தேகமானதுவந் தாதிமூலேசர் தந்தாயுனை கலந்தா
ரோ. ௰௭

(மகள் விடை.) சொல்லரும்வெங்கவடெறிந்து சூதாடு
ம்போதெதிர்மனைக்காய் தன்னைத்தொட்டெடுததேள
ட்டிவெட்டும்பொழுது கைப்பட்டுவளைநெறிதிட்டது.

(தாய் வினா) சித்திரப்பொற்கலைமுகப்பில்வைத்தூடுத்திக்கொண்டதென்னமகளே யாத்திங்கள்புனைத்திடு சங்காரம்பிளைபங்க ராதிமூலலிங்கருணைவந்தாரோ. ௧௯

(மகள் விடை.) மெத்தமிசையிருட்டறையில் நித்திரைகொண்டெழுந்துவரும்போதே அந்தவீட்டிருளிற்கலைபோட்டபடிசற்று நோட்டந்தெரியாமற்கூட்டிக் கட்டிக்கொண்டேன்தாயே. ௨௰

(தாய் வினா) இளங்கருப்பக்காரியைபோ லிருந்திருந்து மயங்குவதென்னமகளே உனக்கிதெல்லாமறிவன் பொய்யில்லாமற் சொல்லடிநல்லாதிமூலேச ருல்லாசமாய்வந்தாரோ. ௨௧

(மகள் விடை) களங்கமில்லாத்தோழியுடன் கைகோத்துக்கொண்டுதும்பிபறந்தேன் அந்தக்கலக்கத்திற் பித்தந்தலைக்கேறி மிக்கமலக்கடிதோன்றிற்றிலக்கணமாய்சொன்னேன்தாயே. ௨௨

(தாய் வினா.) சூதுக்கள்ளிநாளுக்குநாள் சோறுவெறுப்பானதென்னமகளே நீதான்சும்மாயொளியாதேயம்மா நீசொல்லடியெம்மாதிமூலர் பெம்மானுனையணைந்தாரோ. ௨௩

(மகள் விடை) ஏதடிபூராயமாயெடுத்தெடுத்துச் சொல்லிச்சண்டைக்கிடமாய்அடிநீ யெந்தனையிப்போதுநிந்தனைசெய்கிறாய் மிகுந்தாலதுமருந்தல்லவோதாயே.

(தாய் வினா) கொயிணமாதேயுனக்குட அடிவயறுகனத்ததென்னமகளே நீதான்கூச்சப்பட்டாற்புவிக்கேச்ச

ல்லவோ வெற்றிமேய்ச்சாதிமூலேசர் பேச்சாலுனைக்
கலந்தாரோ. ௨௫
(மகள் விடை.) வெடிமலர்ப்பூங்கோதையர்முன் வீணை
யிசையான்பாடக்கேட்டேன் என்னைமெச்சியழைத்து
போயுச்சிதமாகவேகச்சாயந்தந்திடப் பட்சணங்கொ
ண்டனன் தாயே. ௨௬
(தாய் வினா.) போனகப்பாலருகிருக்கப் புளித்ததெல்
லாம்புசிப்பதென்ன மகளே சற்றும்புத்தியில்லாளென்
றேயெத்தூறுபுனைத்தராதிமூலர்முத்தமிடவந்தாரோ
(மகள் விடை.) கானலென்றெண்ணுமற்கடுங் கானின்
மின்னாரேடும்விளையாடிமெத்த களைததோடிவந்தவிளை
ப்பதினாலே புளித்துதின்றலிப்பஞ்சொல்லாதேயென்
தாயே. ௨௮
(தாய் வினா.) கனகதனத்தின்முகமிரண்டுங் கறுத்து
னமுகம்வெளுத்ததென் மகளே உன்னைகள்ளத்தனமு
டன்மெள்ளப்பசப்பியே வள்ளலாதிமூலருள்ளமகிழ்ந்
தாரோ. ௨௯
(மகள் விடை.) இனியொளித்தாற்றீராதென் னேழை
மதிப்பேதைமையினாலே அந்தரீசர்பவனிகண்டாசை
கொண்டேன் வெகுமோசம்போனேனினி ரோஷஞ்
செய்யாதேயென்தாயே. ௩௰
(தாய் வினா) ஏதடியுன்சாதனை தரணிமேதினிலும் வடு
க்காரணமேமன்உன்னையேத்தி சதிமூலவித்தகாதலாய்ச்
சித்தசனை செய்கைக்குறியல்லவோ மகளே. ௩௧

(மகள் விடை.) கோதையர்முன்வேதனையாய்க் கொட்
டிக்கொள்ளஞாயமுண்டோகூறாய் அடிநீகோட்டானை
ப்போனின்று நாட்டாண்மைபண்ணாதே கோபம்வந்
தாலினிப்பாபமென்றுபாரேன்தாயே. ௩௨
(தாய் வினா.) கோபம்வந்தாலென்னசெய்வாய் குடி
கேடியுனக்குள்ளதை நான்சொன்னால்அடியுன் கோட்
டுமுலைகள்குலுங்கக்குலுங்கக் குதித்துக்குதித்துக்கொ
ண் டோடிவாடிசின்னஞ்சிறுக்கியே. ௩௩
(மகள் விடை.) சிறுக்கியென்றேபிறுக்கிமெத்த சினந்
துவந்தால்மனதைத் தொட்டுப்பாராய்உன்னைக்சின்ன
க்கண்டமாகத்தறிப்பேன் சீச்சியுனக்கென்ன பேச்செ
ன்னடிகிழவோரி. ௩௪
(தாய் வினா) ஓரியென்றதேதடிநீ யுறவின்முறையாரிட
த்தில் வாடிஅடியுன் றன்செருவமடக்காவிட்டா லுன்
னைப்பெற்றவளல்ல போகாதேகில்லடிகள்ளி. ௩௫
(மகள் விடை.) கள்ளியென்றகுணக்கேடி கள்ளினின்
றுபேசும்பத்ர காளிதூபங்கண்டிடும்பேய்போலே வ
ண்டத்தனங்களைக்காட்டாதே பப்பரமாடிவிப்பேன்கி
ழமூளி. ௩௬
(தாய் வினா) மூளியென்றவாய்கிழித்து மூளையழியச்ச
பைதனில் யிழுத்தேஉன்னைமூக்குமுலையு மறியச்சொ
ல்லாவிட்டால் முத்துமாங்காளபெற்ற மோகனமாலை
பென்பெயரோ. ௩௭
(மகள் விடை.) பேரைச்சொல்லிவந்துரைக்கும் பேய்
த்தமுதைநாசக்கிழவிபோடி என்னோ பேசாதபேச்செல்

ம்ப பேய்ப்பேசவின்னபேய்க்கரடி யென்றன்னைப் போராக்கிவைக்கவுமாச்சே. ௩௮
(தாய் வினை) ஆச்சாக்கேயித்தனையு மயன்வகுத்தாலு ன்னை வெறுப்பாறேன்நல்ல தாகட்டுமுன்னைநான்போ கட்டுவேனே வடங்காப்பிடாரியதியவேபோகிறாய்நீலி. (மகள் விடை.) நீலியென்றேயென்னையிந்த நீதிப்பிழை யோதிப்பிழையோஉன்னைநெஞ்சை பிளந்தாலுந்தோ ஷமில்லை யானுற்நீருமெனக்கொரு தாயென்றிருந்துவ ந்தாயே. ௪௰
(தாய் வினை.) தாய்வார்த்தைகேளாதே நாய்வாயில் கோலையிட்டாற்போனீ பெற்றதாய்க்காகாத பிள்ளையூ ர்க்காகமாட்டாது சண்டாளியுன்முகங்கண்டாலும் பா வங்களல்லவோ. ௪௧
(மகள் விடை) அல்லவென்றுபற்கடித்தே யல்பியுந்நா ள்வலிப்புதண்டோவாடி அடிநீ யாங்காரமாய்ப்பேச வேண்டித்தொடுத்தாயதற்கு முனிப்படியானால்நானெ ன்னசெய்வேண்டி. ௪௨
(தாய் வினை.) நானென்னடிசெய்வதிப்போ நரைத்ததி ரைலச்சைகெட்டுபோச்சோ சும்மாநச்சுநச்சென்றென் னை எத்திக்கெடுக்காதே நாயக்குணமோவுன்றன் பே ய்க்குணமோவுன்றன்போடிமகளே. ௪௩
(மகள் விடை.) போயுனைபோல்வேறுமுண்டோ சோ பித்துக்கொண்டாற் தற்கிக்கொண்டுபோடி என்னைப் பேசினபேச்செல்லாம்உண்டு பண்ணுவிட்டாற்பிச்சல் லோபோடுவேன் முச்சிலோநான்விடுவேனே. ௪௪

(தாய் வினா.) விடுவேனோவென்றுசொன்ன வியாகள் நானுமறிவேண்டு இந்தவீம்புகள்சொன்னாலெளிதிலே நானுனைவிட்டேனோ தானேடேகட்டி யடிக்கச்சொல் வேனோ. சஉ

(மகள் விடை.) கட்டவுந்தானுன்வீட்டிற் கன்னமிட்டுப்புதையலெடுத்தேனோ உன்றன்கைஎன்னவாயென்ன மிஞ்சின பேச்சென்னகாலில்விலங்கிட்டு மூலையிற்போட்டுவைப்பேனோ. சங

(தாய் வினா) மூலையிலேகிடந்தவென்னை முற்றத்திலே யிழுத்துவிட்டாய் சிறுக்கிந்தமொண்டி முரண்டுபண்ணாதேயொருவர்மேல் மோகங்கொண்டால வழுவாகுநகண்டாயடி மகளே. சச

(மகள் விடை.) வழுவறஞன்செய்தவத்தா லழகியநாபசுராதிமூலர்தம்மை வைபோகமாகவேசையோகஞ்செய்துநாணையமில்லாதினி யுபவகைதேடினன் தாயே. ()

(தாய் மனக்களிப்புறல்.) பழுநழுவிப்பாலில்விழும் பழுந்தைபோலானதுவும் அன்றிச்சர்க்கரைப்பந்தலிற்றேன்மழைசிந்தியதுபோலே யென்றனுக்கின்றல்லோ வந்தது பாக்யமென்மகளே. சசு

ஆதிமூலேசர்பேரில்

தாய்மகளேசல் வினா-விடை.

முற்றிற்று.